



# பேச்சுக்கலை

முனைவர் சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மன்னார்குடி



நூல்:

# பேச்சுக்கலை

---


ஆசிரியர்:

முனைவர் **சா.சம்பத்** (தேசிய பயிற்சியாளர்)

மன்னார்குடி

கைப்பேசி: +91 94431 14354

மின்னஞ்சல்: yeses.eng@gmail.com


---


வடிவமைப்பு:

## திறவுகோல்

மன்னார்குடி, தமிழ்நாடு

கைப்பேசி: +91 8220567322

மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com

இணையதளம்: http://maintharkal.mannai.in

---

**பக்கங்கள்: 25**

முதல் பதிப்பு: 2050 மாசி

# அணிந்துரை

எழுச்சி முரசு முனைவர் சா.சம்பத் அவர்களின் பேச்சுக்கலை நூலுக்கு அணிந்துரை எழுதுவது எனக்கு கிடைத்த பெருமை. மேடையில் எப்படி பேசுவது என்பது குறித்து அவரிடம் பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கானவர்களில் நானும் ஒரு மாணவன் என்பதில் எனக்குப் பெருமை.

இந்த நூல் ஒருவர் மேடையில் பயமின்றி தன்னம்பிக்கையோடு பேச முடியும் என்பதை உறுதிசெய்யும்.

தொலைக்காட்சிகள், பட்டிமன்றங்கள், பள்ளிகள், கல்லூரிகளில் என ஆயிரக்கணக்காண மேடைகளில் தன் எழுச்சி மிகு பேச்சால் கேட்பவர்களை கட்டிப்போடும் வித்தகர், தனது அனுபவத்தை புத்தகமாக எழுதியிருப்பது சாலச் சிறந்தது.

இந்தப் புத்தகத்தில் மேடைப் பயத்திற்கான காரணங்கள், அதனை எதிர்கொள்ளும் கலை, மேடைப் பேச்சின் சூட்சுமங்கள், மேடைப் பேச்சின் வகைகள் என அத்தனை கருத்துக்களும் எளிமையாகவும், அனைவரும் புரிந்துகொள்ளும் வகையிலும் சொல்லப்பட்டிருப்பது அருமை.

தகுந்த உதாரணங்களுடன் பேச்சாளரின் தோற்றம், அசைவுகள், சைகைகள் என எல்லாவற்றிலும் தன் முத்திரையைப் பதித்துள்ளார் ஆசிரியர்.

ஒருவர் மேடைப் பேச்சில் சிறந்து விளங்க இந்த நூல் கலங்கரை விளக்கமாக திகழும் என்றால் அது மிகையில்லை.

மனம் நிறைந்த வாழ்த்துகள்

ஜே.சி.வீ.காந்தி லெனின்
மண்டல இயக்குனர்
மண்டலப் பயிற்சியாளர்
ஜே.சி.ஐ இந்தியா/மண்டலம் 23




# முன்னுரை

விலங்குகளில் பேசத் தெரிந்தவன் மனிதன் மட்டுமே, அந்த பேச்சை சிறப்பாக, சரியாக பேச பேச்சுக்கலை அறிந்துக் கொள்ள வேண்டியது அவசியம். பேச்சுக்கலை என்பது ஒவ்வொரு மனிதனும் விரும்பி பெற வேண்டிய பொக்கிஷமிது, தலைமைப் பண்பில் சிறந்து விளங்க வேண்டுமாயின் பேச்சுக்கலை என்பது மிக அவசியம்.

ஒரு மனிதனின் தன்னம்பிக்கையை வளர்த்து அவனின் ஆளுமைத் திறனை மெருகூட்டி அவனை மிகச்சிறந்த தலைவனாக வழிகாட்டியாக உயரச் செய்வது பேச்சுக்கலையே என்றால் அது மிகையில்லை.

வின்சன்ட் சர்ச்சில், ஆப்ரகாம் லிங்கன், விவேகானந்தர், அறிஞர் அண்ணா ஆகியோரது பேச்சுத் திறமைதான் உலக வரலாற்றில் அவர்களை நிரந்தரமாக இடம் பெறச் செய்தது.

இந்தப் புத்தகம் மிகவும் எளிமையாகவும், தெளிவாகவும் படிப்பவர்களுக்கு பேச்சுகலையின் நுட்பத்தைப் புரிந்துக் கொள்ளும் வகையிலும் இருக்கும்.

இப்புத்தகத்தை படிப்பது மட்டுமின்றி தொடர் பேச்சுப் பயிற்சியே மிகச் சிறந்த பேச்சாளர்களாக உங்களை மாற்றும்.

இப்புத்தகம் எழுத தூண்டுகோலாய் விளங்கிய சிறந்த பேச்சாளர்களின் நூல்கள் மற்றும் பல்வேறு கட்டுரைகள் நன்றிக்குரியவை.

- முனைவர் சா.சம்பத்



# ஏன் பேச்சுக்கலை ?
# (SPEECH CRAFT)

ஒரு நாட்டிற்கு அனாதை சிறுவன் ஒருவன் வந்து தஞ்சம் புகுகிறான். காலப்போக்கில் மிக சிறந்த பேச்சாற்றல் மிக கவனமாக மாறி மிக சிறந்த பேச்சாளராக பல்வேறு துறைகளில் வெற்றி பெற்று பெரும் செல்வத்தை ஈட்டி விடுகிறான். அரசனைவிட அதிக செல்வம் அவனிடம் சேர்ந்து விடுகிறது. இதனை கேள்விப்பட்ட அரசன், அவனை அரண்மனைக்கு வரவழைக்கிறான்.

நீ இந்த நாட்டின் அரசனான என்னை விட உன்னிடம் கூடுதல் செல்வம் உள்ளது, அதில் பாதியை எனக்கு தந்து விட வேண்டும் என்று கேட்கிறான். அதற்கு அவன் அரசே என் பாதி செல்வம் அல்ல, எல்லா சொத்துக்களையும் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள், ஆனால் நான் பேசுவதற்கு மட்டும் தடை விதிக்காமல் இருந்தால் போதும், இழந்த செல்வங்களை போல் பல மடங்கு என்னால் ஈட்டி விட முடியும் ஏனென்றால் பேச்சுக்கலை தான் அழியா சொத்து என்று கூறினானாம்.

பேச்சுக்கலையில் வல்லவர்களாக இருப்பவர்களே அனைத்து துறைகளிலும் சாதனைப் படைக்கிறார்கள் இதைத்தான் வள்ளுவர்

> சொல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
> இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது என்கிறார்.




மேலும் எப்படி பேச வேண்டும் என்பதையும்

> **கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
> **வேட்ப மொழிவதாம் சொல்.**

கேட்போரை கவரும் தன்மையுடையதாகவும், கேட்காதவரும் தேடி வந்து விரும்பிக் கேட்கக் கூடியதாகவும் அமைவதே சொல்வண்மை என்கிறார் வள்ளுவர்.

என்னுடைய எல்லா சொத்துக்களையும் எடுத்துக்கொண்டாலும் கவலைப்படமாட்டேன் ஆனால் ஒரே ஒரு கலையை மட்டும் தக்க வைத்துக்கொள்ள விரும்புகிறேன், அதுதான் பேச்சுக்கலை. அந்த ஒன்று இருந்தால் போதும்! இழந்த அனைத்தையும் பெற்றுவிடுவேன் என்றார் டேனியல் வெப்ஸ்டர் என்ற அறிஞர்.



# தலைமைப் பண்பு

## (LEADERSHIP SKILLS)

ஒருவன் வெற்றியடைய தேவையான பண்புகளில் முதல் இடம் தலைமைப் பண்பிற்கே என்றால் அது மிகையில்லை. எல்லா மனிதர்களும் ஏதேனும் ஒரு சூழ்நிலையில் தலைவர்களே, குடும்பத்தில் கூட குடும்பத் தலைவர் என்ற பட்டத்திற்கு சொந்தக்காரர் ஆகிறார்.

குடும்பம், அலுவலகம், தொழில், தொழிற்சங்கம், சமுதாய அமைப்புகள் இப்படி எத்தனையோ நிலைகளில் நாம் தலைமை ஏற்க வேண்டிய சூழல் ஏற்படும், மற்றவர்களை வழிநடத்த வேண்டி வரும். பேச்சுக்கலை தெரிந்தவர்கள் தனக்கு கீழே இருப்பவர்களை கட்டுப்பாட்டுடன் வழி நடத்திச் செல்ல முடியும்.


தலைமைப் பண்பு வளர பேச்சுக்கலை தான் முதல் காரணியாகும். இன்னும் சொல்லப் போனால் பேச்சுக்கலை ஒரு தலைமைப் பண்பின் லாவகம். நீங்கள் பேசுவதை மற்றவர்கள் கேட்க ஆரம்பித்து விட்டால் நீங்கள் தலைவராகும் தகுதியை பெற்று விட்டீர்கள் என்று அர்த்தம். இன்று அரசியலில் மிகச் சிறந்த தலைவர்களாக இருப்பவர்கள் எல்லாம் பேச்சாற்றல் மிக்கவர்களே.



# தன்னம்பிக்கை வளர்க்கும் பேச்சுக்கலை

## (SELF CONFIDENCE)

ஆயிரம் தெய்வங்கள் மீது நம்பிக்கை வைத்து உன் மீது நம்பிக்கை வைக்கவில்லை என்றால் உன்னை விட நாத்திகன் இந்த உலகத்தில் வேறு யாரும் இல்லை என்றார் விவேகானந்தர். என்னாலும் முடியும் என்று நினைப்பது தன்னம்பிக்கை. பேச்சுக்கலை ஒருவரிடம் புதைந்துள்ள தன்னம்பிக்கையை தோண்டி எடுத்து மெருகூட்டி மற்றவர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டி நம் பேச்சால் எதனையும் சாதித்து விட முடியும் என்ற நிலையை உருவாக்கும். அது நம் முகத்திலும் நடவடிக்கைகளிலும் பிரதிபலிக்கும்.



# தொடர்பாற்றலும் பேச்சுக்கலையும்

## (COMMUNICATION SKILLS)

அறிஞர் அண்ணா சொன்னார், நீங்கள் எதை பேசினாலும் அதை மற்றவர்களை நம்ப வைக்க முடியும் என்கிற நிலைதான், நீங்கள் தொடர்பாற்றல் உடையவர் என்று பொருள் என்றார். ராமாயணத்தில் கூட அனுமான் ‘‘சீதையை கண்டேன்’’; எனக் கூறாமல் ‘‘கண்டேன் சீதையை’’ எனக் கூறியது சிறந்த தொடர்பாற்றலே. எந்த சொல்லை எப்படி எங்கே பயன்படுத்தினால் அதற்கு வீரியம் அதிகம் என்பதை பேச்சுக்கலை கற்றுத்தரும்.



# மேடைப் பேச்சு

தனது கருத்தினை மற்றவர்களுக்குப் புரியும் வகையிலும் கேட்கும் வகையிலும் கூட்டத்தினர் முன்பு பேசுவது மேடைப் பேச்சாகும். ஆனால் இந்த மேடைப் பேச்சை கண்டு அஞ்சி நடுங்குபவர்கள் பல பேர். நண்பர்கள் மத்தியிலோ, உறவினர்கள் மத்தியிலோ சரளமாக பேசும் ஒருவர், கூட்டத்திற்கு முன்பு மேடையில் மைக் முன்னால் பேசுவது பயத்தை உண்டாக்குகிறது.



# மேடை பயம்

## (STAGE FEAR)

மேடையில் பேசுவதென்றால் ஒரு பயம் தொற்றிக் கொள்கிறது. உண்மையைச் சொல்லப் போனால் நாடறிந்த பேச்சாளர் முதல் நேற்று பேச ஆரம்பித்தவர் வரை அனைவருக்கும் மேடை பயம் என்பது பொதுவான ஒன்று.

மனித மூளை பிறந்ததிலிருந்து இடைவிடாமல் செயல்படுகிறது. ஆனால் அது மேடையில் நம்மை பேச அழைக்கும் பொழுது தன் செயல்பாட்டை நிறுத்திக் கொள்கிறது என்ற ஒரு அறிஞரின் கூற்றுப்படி மேடையில் பேசும் போது கண்கள் கட்டுவதும், படபடப்பு ஏற்படுவதும், வயிற்றில் பட்டாம் பூச்சி பறப்பதும் ஏன்?

# மேடை பயம் அறிகுறிகள்

உடைந்த குரல்

அதீத இருதய துடிப்பு

தொடை நடுக்கம்

குரலில் நடுக்கம்

வயிற்றில் பட்டாம்பூச்சி பறப்பது

கண்கள் இருளுதல்

கை வேர்த்தல்

நாக்கு உலர்ந்துப் போதல்

வேகமான மூச்சு ஆகியன மேடைப் பயத்தின் அறிகுறிகள் ஆகும்.

# ப ய ம்

## மேடை பயத்திற்கான காரணங்கள்

சைக்கிள் ஓட்டுவது, நீச்சல் கற்றுக் கொள்வது போன்று புதிதாக ஒன்றை செய்ய ஆரம்பிப்பதால்

தோற்றுவிடுவோமோ என்ற பயம்,

முதன் முதலில் தன் உயர்த்திய குரலை கேட்பது,


காற்றை எதிர்த்து பயணிப்பது போன்ற உணர்வு,

முதல் முதலாக ஒரு கூட்டத்தை எதிர்கொள்வதால்,

எல்லோருடைய கண்களும் நம்மையே பார்த்துகொண்டிருப்பதால்,

பேசும் தலைப்பில் போதிய கருத்துக்கள் இல்லாததால்,

# மேடை பயத்தை போக்கும் வழிகள்



மிக சிறப்பாக தயார் செய்திடுங்கள்.

எப்போதும் தயார் நிலையில் இருங்கள்.

நீங்கள் தனி ஆள் இல்லை என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

மேடை ஏறியதும் ஆழமாக இரண்டு முறை மூச்சை இழுத்து விடுங்கள்.

சிறிய இடைவெளிக்குப் பிறகு பேச்சை துவங்குங்கள்.


நீங்கள் என்ன பேசவேண்டும் என்பதிலேயே கவனத்தை வையுங்கள்.

பார்வையாளர்கள் உங்கள் வெற்றியை விரும்புகிறார்கள் என எண்ணுங்கள்.

எப்போதும் இன்னும் ஒரு வாய்ப்பு உள்ளது என்பதை ஞாபகம் வையுங்கள்.

இதனை விளையாட்டின் ஒரு பகுதி என எண்ணிக் கொள்ளுங்கள்.

பார்வையாளர்கள் உங்கள் நண்பர்கள் என எண்ணிக் கொள்ளுங்கள்.



# பேச்சுக் கலை அமைப்பு

ஒரு பேச்சானது ஆரம்பம் (Opening)

நடுப்பகுதி (Body)

முடிவு (Closing)

என மூன்று பகுதிகளைக் கொண்டது. இதற்கு ஆங்கிலத்தில் OBC CONCEPT என்று பெயர்.

நீங்கள் என்ன பேச போகிறீர்கள் என்று முதலில் கூறுவது ஆரம்பம். என்ன பேச போவதாக கூறினீர்களோ அதை விரிவாக சொல்வது நடுப்பகுதி.


நீங்கள் எதைப்பற்றி பேசினீர்களோ அதனை சுருக்கிக் கூறுவது முடிவு.



# முடிவு

ஒரு விமானம் முழு வேகத்தோடு புறப்படுவது போல் உங்கள் ஆரம்பம் இருக்க வேண்டும். மேலெழும்பிய விமானம் சலனமில்லாமல் பயணிப்பது போல் உங்கள் இடைப்பட்ட பேச்சு அமைதியாய் செல்ல வேண்டும், விமானம் தரையிறங்கும் போது கவனமாய் மென்மையாய் இறங்குவது போல உங்கள் பேச்சு முடிக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் விமானப்பயணம் எப்படி மகிழ்ச்சிக்குரியதாக இருக்குமோ, அப்படி உங்கள் பேச்சு கேட்பவருக்கு மகிழ்ச்சியைத் தரும்.



# ஆரம்பம்
(OPENING)

ஒரு பேச்சு என்பது, ஆரம்பமே அசத்தலாக இருக்க வேண்டும் அது கேட்பவரின் மனதில் இவர் நல்ல பேச்சாளர் என்கிற எண்ணத்தை ஏற்படுத்தும். கேட்பவர் கவனத்தைக் கவரும் வகையில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் ஆரம்பியுங்கள், பின்வரும் யோசனைகளைப் பயன்படுத்துங்கள்.

ஒரு கவிதை அல்லது திருக்குறளுடன் ஆரம்பியுங்கள். ஆர்வத்தைத் தூண்டக்கூடிய ஒரு சம்பவம் அல்லது கதையுடன் சம்பந்தப்படுத்தி ஆரம்பியுங்கள். காட்சிப்பொருள் ஏதாவது உபயோகிக்கலாம் அல்லது கேள்வி கேட்டு ஆரம்பிக்கலாம். அதிர்ச்சி தரக்கூடிய உண்மை சம்பவத்தை கூறியும் பேச்சை ஆரம்பிக்கலாம்.




# இடைப்பகுதி
(BODY)

நீங்கள் பேச வேண்டிய கருத்தை தலைப்பை ஒட்டி மற்றவர்களுக்கு புரியும் விதத்திலும் கவரும் விதத்திலும் பேச்சு அமைய வேண்டும்.

ஏற்ற இறக்கத்துடன் பேசுங்கள்,

எளிய நடையில் பேசுங்கள்,


வித்தியாசமான சிந்தனையோடுப் பேசுங்கள்,

அறிவார்ந்த சிந்தனையோடுப் பேசுங்கள்,

தலைப்பை ஒட்டிப் பேசுங்கள்,

நகைச்சுவையுடன் பேசுங்கள்,

கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் பேச்சை முடியுங்கள்.



# முடிவு
## (CLOSING)

நீங்கள் பேச்சை முடிக்கும் விதம் உங்கள் பேச்சு கேட்பவர் மனதில் நிரந்தரமாக தங்க கூடிய வகையில் அமைய வேண்டும், பின்வரும் யோசனைகள் உங்களுக்கு பயன்படும்.

முன்பு பேசியவற்றை தொகுத்துப் பேசுதல் அல்லது முக்கிய செய்திகளை மட்டும் திரும்பக்கூறுதல்.
ஒரு செயலை செய்யுமாறு வேண்டல் அல்லது கேட்டுக் கொண்டிருப்பவர்களை பாரட்டுதல்.

குரலை உயர்த்தி உச்சகட்ட நிலையை உருவாக்குவது. பேச்சை திடீரென முடிக்காதீர்கள் அதுபோல் பேசுவதற்கு வேறு எதுவும் விடயம் இல்லாததால் இத்துடன் முடிப்பதாக கூறாதீர்கள்.

## ஏற்ற இறக்கத்துடன் பேசுதல்

பேசுவதை ஏற்ற இறக்கத்துடன் பேசினால் அது கேட்பவரை ஈர்க்கும், பல்சுவை விருந்து போல் இருக்கும். குறிப்பாக ஒரு செய்தியை அல்லது கருத்தை வலியுறுத்தும் போது ஏற்றத்துடனும் மற்ற செய்திகளை இறக்கத்துடனும் பேச வேண்டும். ஒரே மாதிரியாக பேசுதல், கேட்பவரிடம் தூக்கத்தை வரவழைத்து விடும். நாம் என்ன சொல்கிறோம் என்பதை விட அதை எப்படி சொல்கிறோம் என்பது மிக முக்கியம்.

## வித்தியாசமான சிந்தனையோடுப் பேசுதல்

பெரும்பாலும் பேச்சாளர்கள் கருத்துக்களை புத்தகம், இணையம், சமூக வலைதளங்கள் மற்றும் அறிஞர்களின் பேச்சுகளிலிருந்தோ தான் எடுத்து கூறுவார்கள், அப்படி பேசும் போது அந்த கருத்துகளில் உங்கள் சிந்தனையை ஏற்றி உங்கள் பாணியில் பேசுவது கேட்பவரை ஈர்க்கும்.

## அறிவார்ந்த சிந்தனையோடுப் பேசுதல்

முட்டாள் சிந்திக்காமல் பேசுகிறான் ஆனால் அறிஞன் பேசும் முன் சிந்திக்கிறான், இந்த பேச்சு தனக்கோ பிறருக்கோ இந்த சமுதாயத்திற்கோ தீங்கு விளைவிக்காது. மாறாக நன்மையே பயக்கும் என்றால் தான் அந்த கருத்தை வலியுறுத்துவான். அப்படி பேசும் பேச்சுதான் கூட்டத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும்.

## சிந்தனையை தூண்டும் விதமாகப் பேசுதல்

மனிதன் மற்ற விலங்குகளில் இருந்து மாறுபடுவது அவனின் சிந்தனை ஆற்றலலால் தான். ஒரு சிறந்த பேச்சு ஒருவனின் சிந்தனையைத் தூண்ட வேண்டும், பேசி முடிந்த பிறகும் நீண்ட நேரம் கேட்பவரை சிந்திக்க வைக்க வேண்டும். அதன் மூலம் அவரிடம் நல்ல மாற்றத்தை கொண்டு வர முடியும்.



## தலைப்பை ஒட்டி பேசுதல்

எந்த கருத்தை வலியுறுத்தி பேசினாலும் அது தலைப்பை ஒட்டியே இருக்க வேண்டும், உங்களுக்கு தெரியும் என்பதற்காக தலைப்பை விட்டு விலகி கருத்துக்களை கூறகூடாது. சம்பந்தாச் சம்பந்தம் இல்லாமல் பேசுதல் நிகழ்ச்சி ஏற்பாட்டாளரையும், கேட்பவரையும் எரிச்சலுக்கு உள்ளாக்கும், அவர்களது எதிர்பார்ப்பு பொய்த்து விடும் எனவே கொடுக்கப்பட்ட தலைப்பு எதுவோ அதனை சார்ந்தே ஒரு பேச்சாளரின் பேச்சு இருத்தல் வேண்டும்.


## நகைச்சுவையுடன் பேசுங்கள்

பேச்சின் ஊடே நகைச்சுவையாக பேசுவது கேட்பவரை உற்சாகப்படுத்தும் மற்றவர்களை புண்படுத்தாத நாகரிகமான ஜோக்குகளை, கதைகளை உங்கள் கருத்திற்கு ஏற்றாற் போல் பயன்படுத்தலாம்.

## பேச்சுக்கலை சூத்திரம் (சர் வின்சன்ட் முறை)

ஒரு பேச்சு எப்படி இருக்கவேண்டும் என்பதனை அறிஞர் சர் வின்சன்ட் இப்படி கூறுகிறார்.

1. கம்பீரமான ஆரம்பம்
2. ஒரு நேரத்தில் ஒரு கருத்தை மட்டும் பதிவுசெய்தல்
3. எளிமையான சொற்களைப் பயன்படுத்துதல்
4. கேட்பவரின் மனதில் சிந்தனையைத் தூண்டுவது.
5. உணர்ச்சிகரமாக முடிப்பது.




# பேச்சை தயார் செய்தல்

மேடைப் பயத்தைப் போக்க சிறந்த வழி சிறப்பாக தயார் செய்வதில் தான் உள்ளது. நீங்கள் பேச போகும் தலைப்பு சம்பந்தமாக கருத்துகளைத் தொகுத்து பின் அதை முறைப்படுத்தி எழுதி தயார் செய்துக் கொள்ள வேண்டும். பின் மூன்று அல்லது நான்கு முறை பேசி பயிற்சி பெற்ற பின்னர் முக்கிய குறிப்புகளை 5'x3' கார்டில் கையில் வைத்துக் கொண்டு பேசினால் கருத்துகள் மறக்காமல் இருக்கும்.

# பேச்சின் வகைகள்

எல்லா பேச்சுக்களும் ஒரே மாதிரியானவை அல்ல, சூழ்நிலைகளுக்கு ஏற்ப பேச்சின் வகை மாறுபடும். குறிப்பாக வரவேற்புரையும், நன்றியுரையும் முற்றிலும் வேறுபட்டவை. உங்களுக்கு எந்த வகையான பேச்சு கொடுக்கப்பட்டுள்ளதோ அதற்கேற்றவாறு தயார் செய்து கொண்டு பேசவும்.

1. வரவேற்புரை (Welcome Speech)
2. அறிமுகப்படுத்துதல் (Introductory Speech)
3. பாராட்டுரை (Felicitation Speech)
4. ஏற்புரை (Acceptance Speech)
5. சிறப்புரை (Key Note Speech)
6. நன்றியுரை (Vote of Thanks)



# பேச்சாளர் கவனிக்க வேண்டிய விடயங்கள்

பின்வரும் விஷயங்களில் ஒரு பேச்சாளர் கவனம் செலுத்துவது மிக அவசியம்.

1. தோற்றம்


2. கை அசைவுகள், சைகைகள்

3. கண்ணோடு கண் பார்ப்பது

4. பார்வை உபகரணங்கள்

5. ஆடை

6. மைக்



# தோற்றம்
(POSTURE)

சிறந்த தோற்றம் என்பது ஒரே சமயத்தில் கவனமாகவும் இயல்பு நிலையிலும் இருக்க வேண்டும்.

பேசும் போது இரண்டு கால்களும் ஒரே நேர்கோட்டில் 12 அங்குலம் இடைவெளியில் நிற்க வேண்டும்.

வயிற்றைச் சற்றே உள்ளே இழுத்து நெஞ்சை நிமிர்த்தி தாடையைச் சற்றே சரித்து நேராக நின்று பேச வேண்டும். முன்னும் பின்னும் ஆடகூடாது.

இரண்டு கைகளும் பக்கவாட்டில் இயல்பாக தொங்கலாம், போடியத்தின் மீது ஒரு கையை வைத்துக் கொள்ளலாம். முகம் புன்னகையோடும், உயிரோட்டத்தோடும் இருக்கட்டும்.



# அசைவுகள், சைகைகள்
(GESTURE)

சரியான அங்க அசைவுகள் ஒரு பேச்சின் மதிப்பை கூட்டும். கேட்பவரை கட்டுப்படுத்தும், மிகச்சிறந்த பேச்சிற்கு அணிகலனாக அமைவது அங்க அசைவுகள் தான்.

உங்கள் கைகளைப் பயன்படுத்தும் விதம், முகத்தில் காட்டும் பாவனைகள் இவையே சைகைகள் (Gesture) எனப்படும்.

தேவைப்படும் இடங்களில் சொல்வதை விளக்குவதற்காகவோ, வலியுறுத்திக் கூறவோ கைகளைச் சைகைகளுக்குப் பயன்படுத்தலாம்.

கண்ணோடு கண் பார்த்தல்.

ஒரு பேச்சாளர், பார்வையாளர்களின் கண்களைப் பார்த்துப் பேச ஆரம்பித்தாலே தன்னம்பிக்கை வந்து விடும்.

பார்வையாளர்களின் கண்களை கனிவுடனும், புன்னகையுடனும் சந்தியுங்கள்.

பார்வை ஒரு பக்கத்தில் இருந்து மற்றொரு பக்கத்திற்கு அவர்களை தழுவியபடியே செல்லட்டும்.

குறிப்பிட்ட இடைவெளியில் மீண்டும் மீண்டும் உங்கள் கண்களால் பாருங்கள்.



## ஆடை

பேசும் சூழலுக்கு பொருத்தமான ஆடை அணிதல் சிறப்பு. கண்களை உறுத்தாத சுருக்கமில்லாத ஆடைகள், நன்கு வாரப்பட்ட மிதமான எண்ணெயிடப்பட்ட தலை என பார்வையாளர்களை கவரும் விதத்தில் ஆடை இருப்பது நல்லது.

## மைக்

மைக்கை உங்கள் நண்பனாக நினையுங்கள்.

மைக்கிற்கும் உங்களுக்கும் இடையே சுமார் 6 அங்குலம் இடைவெளி இருக்கட்டும்.

மைக் உங்கள் தாடைக்கு நேராக இருக்கட்டும்.

மைக் ஸ்டான்டை கைகளால் பிடிக்காதீர்கள்.

இயல்பாக பேசுங்கள்.





# பேச்சுக்கலையின் பத்து கட்டளைகள்

## (TEN COMMANDMENTS)


1. பேச்சை மன்னிப்புடன் ஆரம்பிக்க கூடாது.
2. புள்ளி விபரங்களால் பேச்சை நிரப்பிவிட கூடாது.
3. அதிகம் உணர்ச்சிகவசப்பட கூடாது.
4. மிகைப்படுத்த கூடாது.
5. பழி சொல்லுதலோ நியாயமின்றியோ பேச கூடாது.
6. மந்தமாய் பேச கூடாது.
7. சுற்றி வளைத்துப் பேச கூடாது.
8. மொழியை கொலை செய்தல் கூடாது.
9. பேசும் பொருளை விட்டு விலகக்கூடாது.
10. கேட்பவர்களின் நேரத்தை வீணடிக்க கூடாது.

# முடிவுரை

பேச்சுக்கலைப் பயிற்சியை வளர்த்துக்கொள்ள வேண்டுமாயின் இதை படித்தால் மட்டும் போதாது, இந்த நுணுக்கங்களைப் பயன்படுத்தி மேடையில் தொடர்ச்சியாக பேசி பயிற்சி பெற வேண்டும்.

சில மேடைகளில் முதலில் தட்டு தடுமாறி பேசினாலும் தொடர்ந்து இடைவிடாத பயிற்சியும் முயற்சியும் உங்களை மிகச் சிறந்த பேச்சாளராக மாற்றும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

எந்த மேடையில் பேச வாய்ப்பு கிடைத்தாலும் அதை நழுவ விடாமல் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பேச்சுக்கலை உங்கள் வசமாகும், நீங்கள் விரும்பியதும் உங்கள் வசமாகும், வாழ்த்துகள், நன்றி.



## முனைவர் சா. சம்பத்

தேசிய பயிற்சியாளர்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே உள்ள பரவாக்கோட்டை கிராமத்தில் 1969 ஆம் ஆண்டு பிறந்தவர். பள்ளிப் படிப்பை பரவாக்கோட்டை கிராமத்தில் படித்த இவர் பொறியியல் படிப்பை தஞ்சையிலும் மேற்படிப்புகளை பல்வேறு பல்கலைக்கழகங்களில் பயின்றவர். மேலும் மின்னியல் பொறியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர்.

மின்சார துறையில் பொறியாளராக பணிபுரியும் இவர் பள்ளிக்காலம் தொட்டே கவியரங்கம், பேச்சரங்கம் மற்றும் பல்வேறு பட்டிமன்றங்களில் பேசியவர். மனித வள மேம்பாட்டு பயிற்சியாளராக சுமார் 1000க்கும் மேற்பட்ட பயிற்சிகளை பள்ளிகள், கல்லூரிகள், பல்வேறு நிறுவனங்களில் நடத்தியவர். 100க்கும் மேற்பட்ட பேச்சுக்கலை பயிற்சியினை பல்வேறு துறையினருக்கு நடத்தியவர். இவரது கவிதைகள், கட்டுரைகள் பல்வேறு வார மற்றும் நாளிதழ்களில் வெளி வந்துள்ளன.

சிறந்த கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர் மற்றும் பயிற்சியாளர்.
சிறந்த பொறியாளர் விருது, சிறந்த சமூக சேவை விருது, கமல் பத்ரா விருது, மாவட்ட ஆட்சியர் விருது, எழுச்சி முரசு பட்டம், பயிற்சி துறைக்கான கௌரவ முனைவர் பட்டம் ஆகியன இவர் பெற்ற விருதுகள்.